தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 23, திருவள்ளுவர் ஆண்டு–2045

2014 ஆகஸ்ட் 8, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு"

குறைவு இல்லாத விளைபொருள்களை உற்பத்தி செய்வோரும், தகுதி மிக்க அறிஞர்களும், நல்வழியில் பொருள் சேர்த்த செல்வர்களும் ஒருசேரப் பொருந்தி உள்ள நாடே சிறந்த நாடாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 375, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

375—

சீரமைத்தல்

***44317—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகர் முதல் நாட்டுச் சாலை வரையிலுள்ள சாலையினை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

மதுக்கூர்-பட்டுக்கோட்டை சாலையின் ஒரு பகுதி 2013-2014 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமான கேள்வியை 2012 ஆம் நிதியாண்டிலே நான் கேட்டபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அச்சாலையை பழுது பார்ப்பது பற்றி ஆய்வு செய்யப்படுமென்று கூறினார்கள். அதற்கேற்ப நாட்டுச் சாலையிலிருந்து மதுக்கூர் வரை சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சாலைப் பணிகள் நல்லமுறையிலே இன்றைக்கு முடிவு பெற்றிருக்கின்றன. அதற்காக என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்த இரண்டு வருடங்களில் பட்டுக்கோட்டையிலிருந்து நாட்டுச் சாலை வரை, இடையிலுள்ள 4 கிலோ மீட்டர் சாலை பழுதடைந்துவிட்டது. வரும் மழைக் காலங்களிலே மேலும் அது பழுதடைவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. எனவே, அதைக் கருத்தில் கொண்டு ஆய்வு செய்து, அந்தச் சாலையையும் மேம்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுக்கூர்-பட்டுக்கோட்டை சாலை கிலோ மீட்டர் 59/0-ல் ஆரம்பிக்கப்பட்டு கிலோ மீட்டர் 70/0 வரை ஆகும். இச்சாலை மாவட்டத்தின் முக்கியச் சாலையாகும்.

இச்சாலையில் கிலோ மீட்டர் 59/0 முதல் 64/6 வரை 2013-2014 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்டுள்ளது. இதிலுள்ள சிறுபாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு அணுகுசாலைப் பணிகள் மட்டும் தற்போது நடைபெற்று வருகின்றன. நாட்டுச் சாலை-பட்டுக்கோட்டை நகரம் கிலோ மீட்டர் 64/2 முதல் 70/0 வரையுள்ள சாலைகளை வரும் நிதியாண்டில் மேம்படுத்த பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிகளைத் தொடர்ந்து பரிசீலிப்போம் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதியில் உள்ள விஜயநாராயணம் இட்டாமொழி தார்ச் சாலையின் நீளம் 7.8 கிலோ மீட்டர் ஆகும். இந்த தார்ச் சாலை நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமானது, இச்சாலையில் 6 கிலோ மீட்டரிலிருந்து 7.8 கிலோ மீட்டர் வரை, இடைப்பட்ட 1.8 கிலோ மீட்டர் தூரம் சாலை பழுதடைந்துள்ளது. பழுதடைந்த 1.8 கிலோ மீட்டர் சாலையைச் சீரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் இச்சாலை 7.75 மீட்டர் அகலம் கொண்டது; இதில் 5.5 மீட்டருக்கு தார்ச் சாலையாக அகலப்படுத்தி சாலையை விரிவுபடுத்த வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1.8 கிலோ

மீட்டர் தூரத்திற்கு சாலை பழுதடைந்துள்ளதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்தச் சாலையைச் சரி செய்து, அகலப்படுத்த வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். வருகின்ற நிதியாண்டில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அந்தச் சாலையை சரி செய்ய ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பணிவான வணக்கம். வேலூர் முதல் கிருஷ்ணகிரி வரையிலான ஆறு வழிச் சாலையிலிருந்து வாணியம்பாடியில் ஆரம்பிக்கப்பட்டு, ஜோலார்பேட்டை, திருப்பத்தூர், ஊத்தங்கரை, அனுமன்தீர்த்தம், அரூர், சாமியாபுரம் கூட்டு ரோடு வழியாக, சேலம் முதல் ஆத்தூர் வரை செல்லும் சாலையில் அயோத்திபட்டினத்தில் சேருகின்ற சாலையானது 125.8 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை. இது 7 மீட்டர் அகலம் கொண்ட மாநிலச் சாலையாக உள்ளது. இதில் போக்குவரத்து அதிகப்படியாக இருக்கின்ற காரணத்தினாலும், சாலையின் அகலம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. ஆகையால் இந்தச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, சேலம் to வாணியம்பாடி சாலை என்று கருதுகின்றேன். 125 கிலோ மீட்டர் நீளமுள்ள அந்தச் சாலையில், அதிகமான அளவில் போக்குவரத்து இருப்பதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். தற்போது T.N.R.S.P. திட்டத்தின்கீழ்,*

2014 ஆகஸ்ட் 8]

அந்தச் சாலைப் பணிகளைத் தொடங்குவதற்கு பரிசீலிக்கப்பட்டு வருகின்றது. அதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.*

திரு. எல். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட அரகண்டநல்லூர், ஆ.கூடலூர் வழியாக, ஆயந்தூர் வரை வருகின்ற சாலை மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. அதேபோன்று மணலூர்பேட்டையிலிருந்து காங்கியனூர், பள்ளிசெங்கல், ஜம்பை, மேலந்தல் வழியாக மூங்கில்துறைப்பட்டுக்குச் செல்கின்ற சாலையும் மிகவும் மோசமாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதை சரிசெய்ய முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்றபிறகு, பெரும்பாலான சாலைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்திலே மொத்தம் 62,017 கிலோ மீட்டர் சாலைகள் இருக்கின்றன. இதிலே மாநில அரசின்மூலமாகப் பராமரிக்கப்படுகின்ற தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 2,250 கிலோ மீட்டர் ஆகும். இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின்மூலமாகப் பராமரிக்கப்படுகின்ற சாலைகளின் நீளம் 2,724 கிலோ மீட்டர் ஆகும். ஆக மொத்தம், தேசிய நெடுஞ்சாலைகள் என்ற வகையில் 4,974 கிலோ மீட்டர் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசின்மூலமாகப் பராமரிக்கப்படுகின்ற சாலையினுடைய நீளம் 57,043 கிலோ மீட்டர் ஆகும்.*

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மூன்றாண்டுக் கால பொற்கால ஆட்சியில் திட்டம்

மற்றும் திட்டம் சாராப் பணிகள் மற்றும் பல்வேறு அலகில் மேம்பாடு செய்யப்பட்ட சாலைகளினுடைய நீளம் 33,490 கிலோ மீட்டர் ஆகும். 33,490 கிலோ மீட்டர் சாலைகள் கடந்த மூன்று ஆண்டுகளிலே மேம்படுத்தப்பட்டுள்ளன என்பதை இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எஞ்சிய சாலைகளான 23,553 கிலோ மீட்டர் சாலைகள்தான் இன்னும் சீரமைக்கப்படாமல் இருக்கின்றன. இந்த 2014-2015 ஆம் நிதியாண்டில், திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணியின்கீழ், அனைத்து அலகுகள் உட்பட, 11,300 கிலோ மீட்டர் சாலைகள், நடப்பாண்டிலேயே மேம்பாடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எஞ்சியுள்ள சாலைகள் 2015-2016 ஆம் ஆண்டில், திட்டம் மற்றும் திட்டம் சாராப் பணிகளின்கீழ் மற்ற அனைத்து அலகுகளையும் உள்ளடக்கிய 12,253 கிலோ மீட்டர் சாலைகளின் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஆகவே, அடுத்த நிதியாண்டிற்குள் 12,253 கிலோ மீட்டர் சாலைகளும் சீரமைக்கப்படும் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக மொத்தம், 5 ஆண்டுக் காலத்திலே, இத்துறைக்குச் சம்பந்தப்பட்ட 57,043 கிலோ மீட்டர் நீளமுள்ள அனைத்துச் சாலைகளும் சீர்செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கின்ற அந்தச் சாலைகள் நடப்பாண்டிலே எடுத்துக்கொள்வதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய முதல்வர், தொழிலாளர்களுடைய விடிவெள்ளி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சென்னையில், அண்ணா சாலைக்கு மேல்புறம் உள்ள BATA கடைக்கு அருகில் செல்லக்கூடிய சாலை Blackers Road என்று அழைக்கப்படுகிறது. அந்தப் பெயர் ஆங்கிலேயர் காலத்தில் வைக்கப்பட்டதாகும். அதை மாற்றி,

2014 ஆகஸ்ட் 8]

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை அந்தச் சாலைக்கு வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அண்ணா சாலைக்கு அருகில் உள்ள Blackers Road-க்கு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரைச் சூட்ட வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமுளி தேசிய நெடுஞ்சாலையில் இருவழிச் சாலை அமைக்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய பெரியகுளம், தேனி அல்லிநகரம், புதுப்பட்டி, போடி தொகுதியில் இருக்கக்கூடிய வீரபாண்டி, பழனிசெட்டிப்பட்டி, ஆண்டிப்பட்டி தொகுதியில் இருக்கக்கூடிய கூடலூர், அதுபோன்று கம்பம் தொகுதியில் இருக்கக்கூடிய கம்பம் ஆகிய நகரங்களின் உட்பகுதிகள் முழுவதிலும், கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக சாலைகள் போடப்படாமல் மக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அந்தச் சாலைகளைச் சீரமைத்து, அப்பகுதி மக்களுடைய சிரமத்தைப் போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 ஆகஸ்ட் 8

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படாத காரணத்தினால் மீண்டும் அந்தச் சாலைகளின் பராமரிப்புப் பணிகளை மாநில அரசு எடுத்துக்கொண்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, தேவையான நிதியைப் பெற்று, நடப்பு ஆண்டில் சீர்செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.*

திரு. கே.பி. நாகராஜன்: *வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் 37 தொகுதிகளில் மகத்தான வெற்றியைப் பெற்று, எதிர்க்கட்சிகள் அனைத்தையும் பின்னங்கால் பிடரியில் அடிக்கும் அளவிற்கு ஓடவிட்டு, அவர்கள் தமிழகத்திலேயே இல்லாமல் எந்த மாநிலத்திற்குச் சென்றிருக்கிறார்கள் என்றும் விலாசம் தேடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது சிறிய உரையைத் தொடங்குகின்றேன். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உரையாற்றுவதற்கு நேரமில்லை. கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. கே.பி. நாகராஜன்: *கேள்வியைக் கேட்கின்றேன். 2011-2012 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மயிலம் சட்டப் பேரவைத் தொகுதியில் கூட்டேரிப்பட்டு தேசிய நெடுஞ்சாலையில் மேம்பாலம் அமைப்பதற்கு வழிவகை செய்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்குப் பரிந்துரை செய்ய ஆவன செய்தார்கள். அந்தப் பணி எப்போது நடைபெறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

2014 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த உயர்மட்டப் பாலம் அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரிவான திட்ட அறிக்கை தற்பொழுது தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து செண்பகத்தோப்பு செல்கின்ற சாலை 9 கி.மீ. நீளமுள்ள சாலையாகும். அந்தச் சாலை நீண்ட நாட்களாக பராமரிக்கப்படாமல் இருக்கின்றது. சுற்றுலாப் பயணிகள் அதிகம் சென்று வரக்கூடிய அந்தச் சாலையை உடனடியாக செப்பனிடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இது பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளேன். ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட அளவு சாலைகளின் நீளத்தைச் செப்பனிடுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துவருகிறார்கள். நடப்பு ஆண்டில் 11,300 கி.மீ. நீளமுள்ள சாலைகளை மேம்படுத்த, சீர்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு தங்களுடைய கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளபடி, உடுமலைப்பேட்டையிலிருந்து மூணாறு வரை செல்லக்கூடிய சாலையில் 9, 6 செக் போஸ்டிலிருந்து சின்னாறு வரை செல்லக்கூடிய 14 கி.மீ. சாலையானது மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அது வனப் பகுதிக்குச் சொந்தமான இடம். ஏற்கெனவே வனத் துறையின் அனுமதி பெற்று அந்தச் சாலையை widening செய்வதற்கும் strengthening செய்வதற்கும் கோரப்பட்டுள்ளது. கேரளப் பகுதியிலுள்ள சாலை நல்ல நிலையில் உள்ளது. தமிழ்நாடு பகுதியிலுள்ள சாலைதான் மிக மோசமான நிலையில் உள்ளது. அதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துரித நடவடிக்கை எடுத்து, வனத் துறையின் அனுமதி பெற்று, அந்த மிக மோசமான சாலையைச் சரி செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 கி.மீ. சாலை பழுதடைந்துள்ளதாகவும், அது வனப் பகுதியில் உள்ளதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். வனத் துறையினரிடம் அனுமதி பெறுவது என்பது சற்றுக் கடினமான செயலாகும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலை பழுதடைந்துள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள காரணத்தினால், இது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, வனப் பகுதியில் சாலை அமைப்பதற்கான அனுமதியைப் பெற்று, அந்தப் பகுதியில் சாலையை அமைப்பது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள் கேட்ட வினாவைத் தொடர்ந்து ஒரு வினாவைக் கேட்க

2014 ஆகஸ்ட் 8]

விழைகிறேன். திண்டுக்கல் முதல் கூடலூர் வரை தேசிய நெடுஞ்சாலையாக உள்ளது. நகரப் பகுதி முழுவதும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு சொந்தம் என்பது உண்மை. ஆனால், அந்தத் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நகரப் பகுதிகளில் உள்ள சாலைகளைப் போட மறுக்கின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பியிருக்கிறது. அந்தச் சாலைகள் சரியில்லாததால் நகரத்திற்குச் செல்வதற்கு அரை மணி நேரத்திற்கும் மேலாக தாமதமாகின்றது. பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அந்தச் சாலைகளைப் போடுவதற்கு மாநில அரசே பொறுப்பேற்று, விரைந்து செய்து கொடுக்க வேண்டும் என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற சாலைகள் எல்லாம் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் பராமரிக்கப்படுகின்ற சாலைகளாகும். அந்த ஆணையம் புற வழிச் சாலைகளை அமைக்கின்ற காரணத்தினால் நகரத்திலுள்ள சாலைகளைப் பராமரிக்காமல் கிடப்பில் போட்டுவிட்டது. பல ஆண்டுக் காலமாக கிடப்பிலே போடப்பட்டிருந்த காரணத்தினால் அந்தச் சாலைகளெல்லாம் பழுதடைந்திருக்கின்றன. இதுகுறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன், நகரத்திற்குள் செல்கின்ற இந்திய தேசிய நெடுஞ்சாலைகளையெல்லாம் மாநிலச் சாலைகளுக்கு உட்படுத்தி, அத்தகைய மாநிலச் சாலைகளைப் பராமரிப்பது குறித்து இப்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 376, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.